மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கேள்வி கேட்பதினாலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் பராமரிப்பதைப் பொறுத்த வரையில், எந்த வேறு பாடும் எந்தத் தன்மையும் காட்டுவது இல்லை. பராமரிப்பு ஏற்படுகின்ற அளவிற்கு நினைவுச் சின்னங்கள்—காந்திக்கு ஒரு விதமான மண்டபத்தைக் கட்டியிருக்கிறார்கள். அதேமாதிரி எல்லோருக்கும் கட்டுவதில்லை. ஆகவே காமராசர் அவர்களுக்கு ஒருவிதமாக நினைவு ஆலயம் கட்டியிருக்கிறோம். அதே மாதிரி ராஜாஜி அவர்களுக்கும் கட்டியிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒருவிதமாக நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதைப்போல டெல்லியிலே காந்திக்கும், நேருவிற்கும், இந்திரா காந்திக்கும் விதம் விதமாக கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் அங்கே ஒரேவிதமான பராமரிப்பு என்று இருப்பதில்லை. ஆகவே அந்தந்த அளவிற்குப் பராமரிப்புகள் சரிவர நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதிலே வேறுபாடு எதுவும் கிடையாது என்பதையும், ஆகவே பேரறிஞர் அண்ணாவை எந்த அளவிற்கு இந்த அரசு விரும்புகிறதோ, அதே அளவிற்குத்தான் நாட்டினு டைய தலைவர்கள், தமிழகத்தின் தலைவர்கள் என்ற முறையில் பெரும் தலைவர் காமராஜ் அவர்களும் மதிக்கப்படுகிறார்கள், ராஜாஜி அவர்களும் மதிக்கப்படுகிறார்கள், மற்ற தலைவர்களும் மதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10.)

(இ) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்படும் என்கிற கருத்து குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர் களே, தங்கள் மூலம் இந்த அரசிடமிருந்து ஒரு தகவலை அறிய விரும்புகிறேன். சட்டமன்றத்தினுடைய மேலவையைக்கலைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? அதற்கான முயற்சிகளில் அரசு ஈடு பட்டுள்ளது என்பது உண்மையா? ஆகவே அதற்கான காரணகாரியங் களை அரசு அறிவிக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கு இரு அவைகள் இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா, என்ற பிரச்சினை பல்வேறு மாநிலங்களில் அவ்வப்போது வருவது உண்டு. இந்த மாநிலத்திலேயும் வந்தது உண்டு. அந்த எண்ணங்கள் அவ்வப் போது வந்து போவதும் உண்டு. ஆகவே மேலவை இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா, என்பது இந்தியா

முழுவதும் இருக்கின்ற 22 மாநிலங்களில் 6 மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் மேலவையெல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அடிக்கடி வந்துபோனது உண்டு. இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு திட்டவட்டமாக எடுக்கப்படவில்லை. திட்டவட்டமாக எடுக்கப்படுகிற நிலையில் இந்த அவைக்குக் கொண்டு வரப்படாமல் எந்த முடிவும் எடுக்க முடியாது. அவையினுடைய கருத்தை அறிந்து, அவையினுடைய முடிவுக்குப் பிறகுதான் அது எடுக்கப்படும். அப்படி அவையினுடைய கருத்து வந்து, செயற்குறிப்பு போடப்பட்டு, அவைக்கு கொண்டுவருகின்றபோது, அவையில் கருத்தை தெரிவிக்கவோ, அப்போது அதற்கான காரண காரியங்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பும் ஏற்படும். இப்போது திட்டவட்டமான செயற்குறிப்பு, இன்றைய நிலையில் இந்த நேரத்தில் இல்லை என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஈ) பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு குறித்து

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பிற்பட்டோர் நலனுக்காக பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள். அவர்களுடைய கொள்கையின்படி கல்வி, வேலைவாய்ப்பு, பல்வேறு துறைகளில் இருகின்ற முன்னேற்றங்கள் இவைகளைப் பங்கிட்டுத் தரவேண்டும் என்பது பெரியார் அவர்களுடைய கொள்கை ஆகும். அதேபோல் தமிழகத்தில் இருக்கின்ற 5 கோடி மக்களில் 2 கோடி மக்கள் அடங்கிய வன்னிய சமுதாயத்தினர் கடந்த 6ஆம் தேதி அன்று தமிழகத்தில் இந்த நிலையை வலியுறுத்தி தலையை எண்ணுகிற முறையில் எங்களுக்கும் கல்வி, தொழில், வேலை வாய்ப்பில்.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இதை டிபேட்டில் பேசலாம். (குறுக்கீடு).

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள குறுகிய கால வினா.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்து போன விவகாரம். அதை விடுங்கள். சில நேரங்களிலே உங்களுக்கு விதியை மீறி செய்திருக்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லும்போது நான் விதியை மீறி செய்து இருக்கிறேன் என்று சொன்னீர்கள்..............